# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திரு. எஸ். முனுசாமி, பி.எஸ்சி., பி.எல்.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(கூ.மு.பொ), ஆத்தூர்.**

2024–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 07–ஆம் நாள், சனிக்கிழமை

## I.A. No. 7 of 2024

## in

## O.S. No. 20 of 2009

## (CNR No. TNSA13-000042-2009)

1. பழனியப்பன்

2. கந்தன்

3. சிவசங்கர் .....மனுதாரர்கள் / வாதிகள்

/எதிராக/

1. பச்சமுத்து

2. வடிவேல் பிள்ளை

3. சரவணன்

4. ஆறுமுக கோனார்

5. ராஜ்குமார்

6. ராஜ்மோகன் .. எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 06.12.2024–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. L.தயாளன் அவர்கள் ஆஜராகியும், 1, 5, 6 ம் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவுரை

மனுவின் கண்டுள்ள சாட்சியான கிராம நிர்வாக அலுவலரை தாவா பாதையை பார்வையிட்டு பட்டா, அ பதிவேடு, சிட்டா, அடங்கல், FMB ஆகிய ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வேண்டி பிரிவு 151 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

II. **மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :**

மனுதாரர் வழக்கில் 1ம் வாதி என்றும், வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தாவா தடமானது ச.எண்.127/2 என்பது ச.எண்.127/2B1 மற்றும் ச.எண். 127/2B2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அது குறித்து வளையமாதேவி கிராம நிர்வாக அலுவலர் தாவா பாதையை பார்வையிட்டு அதன் பட்டா, அ.பதிவேடு, சிட்டா, அடங்கல் மற்றும் FMB ஆகிய ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்கவேண்டுமென்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

III. 6**–ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1, 5 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம் :**

இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மனுவுடன் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். வளையமாதேவி கிராம புல வரைபடத்தில் சர்வே எண்.127/2 என்பது சர்வே எண்.127/2B1 மற்றும் சர்வே எண்.127/2 B2 என்று உட்பிரிவு செய்யப்பட்டு பூமியில் சர்வே எண்.127/2 B1 ல் 4.4 மீட்டர் அகலத்தில் பாதை இல்லை என்றும், மேற்படி பாதை 9 அடி அகலத்தில் மட்டுமே பூமியில் அமைந்துள்ளது என்றும், நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை 2009ம் ஆண்டு பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தபோதும் அதே அகலத்தில் தான் தாவா பாதை உள்ளது என்றும், ஆனால் புல வரைபடத்தில் மட்டும் 1984 ல் 4.4 மீட்டர் அகலத்தில்

உள்ளதாக பெயரளவில் பூமியில் இல்லாத அகலத்தில் மோசடியாக திருத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி 9 அடி அகல பாதை 1 மற்றும் 5, 6 பிரதிவாதிகளுக்கு மட்டுமே உரிமையான தனிப்பட்ட பாதை என்றும், 1, 5, 6 பிரதிவாதிகளின் ஒப்புதல் இல்லாமல் தவறாக உட்பிரிவு செய்து அந்த உட்பிரிவில் உரிமை இல்லாத நபர்களான பச்சியபிள்ளை மற்றும் வாதிகளின் பெயர்களை கூட்டாக சேர்த்து தவறாக ஆவணங்களை மனுதாரர்கள் தயாரித்துள்ளதாகவும், அவ்வாறு தவறாக திருத்தப்பட்ட வருவாய்துறை ஆவணங்களை கிராம நிர்வாக அலுவலர் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைக்க மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

புல வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அகலம், உட்பிரிவு, கூட்டாக பதிவு செய்யப்பட்ட பெயர்கள் அனைத்தும் சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல என்றும், தாவா பாதையை கிராம நிர்வாக அலுவலர் நேரில் பார்வையிட்டு பாதையின் அகலம், பாதையின் தென்புற ஓரமாக 1, 5, 6 எதிர்மனுதாரர்களின் நிலத்தில் உள்ள தென்னை மரங்கள் மற்றும் அதனுடைய வயது குறித்து விவரங்களோடு கிராம நிர்வாக அலுவலர் சாட்சியம் அளிக்க வேண்டியது அவசியம் என எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

IV. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

V. மனுதாரர் தரப்பில் வழக்கானது எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் தாவா பாதையானது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அது குறித்து வளையமாதேவி கிராம நிர்வாக அலுவலர் தாவா பாதையை பார்வையிட்டு அதன் இயற்கை அமைப்புகள் குறித்து சாட்சியம் அளிக்க வேண்டுமென்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் சொல்வது போல தாவா பாதையானது 4.4 மீட்டர் அகலத்தில் பாதை இல்லை என்றும், மேற்படி பாதை 9 அடி அகலத்தில் மட்டுமே அமைந்துள்ளது என்றும், நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை 2009ம் ஆண்டு பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி 9 அடி அகல பாதை 1 மற்றும் 5, 6 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட பாதை என்றும்,

பிரதிவாதிகளின் ஒப்புதல் இல்லாமல் தவறாக உட்பிரிவு செய்து அந்த உட்பிரிவில் உரிமை இல்லாத நபர்களை சேர்த்து ஆவணங்களை நடைமுறைக்கு விரோதமாக தவறான முறையில் ஏற்படுத்தியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும், எனவே கிராம நிர்வாக அலுவலர் தாவா பாதையை பார்வையிட்டு பாதையின் அகலம், பாதையின் தென்புற ஓரமாக 1, 5, 6 எதிர்மனுதாரர்களின் நிலத்தில் உள்ள தென்னை மரங்கள் மற்றும் அதனுடைய வயது குறித்த விவரங்களை கிராம நிர்வாக அலுவலர் சாட்சியம் அளிக்க நியமிக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிப்பதன் மூலம் இவ்வழக்கின் இறுதியான தீர்வை எட்ட இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பிலும் கிராம நிர்வாக அலுவலர் தாவா பாதையை பார்வையிட்டு சாட்சியம் அளிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வளையமாதேவி கிராம நிர்வாக அலுவலர் தாவா பாதையை பார்வையிட்டு அதன் இயற்கை அமைப்புகளுடன் கூடிய ஆவணங்களான பட்டா, அ.பதிவேடு, சிட்டா, அடங்கல் மற்றும் FMB ஆகிய ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்கவேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

VI. முடிவாக,

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 07-ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S MUNUSAMY

Digitally signed by S MUNUSAMY
Date: 2024.12.07 16:51:08 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ,பொ),**

**ஆத்தூர்.**

| | |
|---|---|
| மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| நீதிமன்ற சாட்சிகள் : | இல்லை |
| நீதிமன்ற சான்றாவணங்கள் : | இல்லை |

S MUNUSAMY

Digitally signed by S MUNUSAMY
Date: 2024.12.07 16:51:23 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ,பொ),**

**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ., ஆத்தூர்.</u>**

**இ.ம.வ. எண் 7/2024**

**-----------------**

**அ.வ. எண் 20/2009**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 07.12.2024.